**தேதி:- 07.03.2020 அசல் வழக்கு எண்.148/2010 வா.சா.2 (சந்திரன்)**

**குறுக்குவிசாரணை:- (18 முதல் 22, 25 முதல் 27 பிரதிவாதிகள் தரப்பில்)**

வா.சா.ஆ.38 ஆவணம் புலஎண்.15/7 க்கு சம்பந்தப்பட்டது. தாவா சொத்து சம்பந்தப்பட்ட ஆவணம் என்பதால்தான் அதை தாக்கல் செய்துள்ளேன். அந்தச் சொத்து வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.39 சொத்து வழக்கில் காட்டப்படவில்லை என்றால் 4 வது லக்கமாக காட்டப்பட்டுள்ளது. நான் தவறாக சொல்கிறேன் என்றும் மனைஎண்.57 ஏ என்றுதான் வா.சா.ஆ.39 ல் காட்டப்பட்டுள்ளது என்றும் சொன்னால் தவறு. வழக்கு நிலுவையில் இருக்கும் போது வாதிகள் பிரதிவாதிகள் 23 மற்றும் 24 ஆகியோருக்கு செய்த கிரையம் எனக்கு அப்போதே தெரியும். பதிவாளர் அலுவகத்திற்கும் நான் சென்றிருந்தேன். 09.04.2012 அன்று 18 முதல் 22 பிரதிவாதிகளுக்கு 2, 7, 8, 16,17, 3, 9 பிரதிவாதிகள் 53 செண்ட் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்குத் தெரியாது. பின்னிட்டு தெரிந்து கொண்டேன். அன்று மதியமே 1 முதல் 5 வாதிகள் 23, 24 பிரதிவாதிகளுக்கு தங்களுக்குண்டான பிரிவினையில்லாத 6 ல்1 பாகத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். வா.சா.ஆ.45 புகார்மனுவை நான்தான் தாக்கல் செய்தேன். அதில் இந்த வழக்கு நிலுவையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் நீதிமன்றத்தில் பணியில் இருந்ததால் வழக்கு நிலுவையில் இருக்கும் போது தாவாச் சொத்தை கிரையம் செய்யக் கூடாது என்பது எனக்குத் தெரியுமென்றால் தெரியாது. தாவாச் சொத்தை கிரையம் செய்த பிறகு வாதிகளுக்கு தாவாச் சொத்தில் பாகம் எதுவுமில்லை. பாகம் கேட்டுத்தான் வாதிகள் தாவா தாக்கல் செய்துள்ளார்கள். அதனால் தாவாச் சொத்துக்களில் வாதிகளுக்கு பாகம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் அதுபற்றி எனக்கு சொல்லத் தெரியவில்லை. 18 முதல் 22 பிரதிவாதிகள் தாவா 1,2 லக்கச் சொத்துக்களை வழக்கு நிலுவையில் இருப்பது தெரியாமல் நல்லெண்ணத்துடன் சரியான பிரதிபலனுடன் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. விற்பனை செய்தவர்களின் அவரவர் பங்குகளை 18 முதல் 22 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் தவறு. நாங்கள் ஏற்கனவே கிரையம் செய்துவிட்டதால் வாதிகள் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.